
# திராவிடத்தால் வாழ்கிறோம்

883

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

---

## திரைக்கதை வசனம் கலைஞர் மு.கருணாநிதி

குமரன்தாஸ்

17

**திரையுலகில் மாபெரும் புரட்சி செய்த கலைஞரின் கைவண்ணத்தில் உருவான படைப்புகளின் பன்முகப் பரிமாணங்களை விளக்கும் தொடர்.**

# மருதநாட்டு இளவரசி: பெண்ணுரிமை பேசிய ராணி!

1950-ஆம் ஆண்டில் கலைஞர் கதை வசனம் எழுதி வெளிவந்த படம் 'மருதநாட்டு இளவரசி'. தனது 26 வயதிலேயே முத்தமிழறிஞர் கலைஞர் எத்தனை அரசியல் அறிவும் தெளிவும் பெற்றவராக விளங்கினார் என்பதை நிரூபித்த படம். ஒட்டுமொத்த தமிழ்நாட்டையும் திரும்பிப் பார்க்க வைத்தார் என்றுதான் சொல்லவேண்டும்.

இப்படத்தின் கதையே மிக அலாதியானது. தொடக்கக் காட்சி முதல் இறுதிக் காட்சிவரை ஒவ்வொரு சட்டகமும் பெண்களை மையமாகக் கொண்டே படைக்கப்பட்டிருக்கும். குறிஞ்சி நாட்டு அரசியின் குளோசப் காட்சியில் இருந்துதான் தொடக்கமே. ஒரே வரியில் கதையைச் சொல்வது என்றால், ஆணாதிக்கத்தால் பாதிக்கப்படும் பெண்கள், அதற்கெதிராக கொதித்தெழுந்து போராடுவதுதான் கதை.

### படத்தின் கதை

குறிஞ்சி நாட்டு மன்னனுக்கு (பி.எஸ்.வீரப்பா) இரண்டு மனைவிகள். முதல் மனைவி சித்ராவும் (சி.கே.சரஸ்வதி) இரண்டாம் மனைவி சிங்காரியும் ஒரே நேரத்தில் கர்ப்பமாக இருக்கின்றனர். இரண்டாம் மனைவியின் அண்ணன் துர்ஜெயன் (எம்.ஜி.சக்ரபாணி) தனது தங்கையின் வாரிசு நாடாள வேண்டும் என்ற எண்ணத்தில் மூத்த ராணிக்கும் மந்திரிக்கும் தகாத உறவு இருப்பதாகக் கதை கட்டிவிட்டு, ராணியை நாட்டை விட்டு விரட்டுகிறான். அமைச்சரைக் கொன்று தனது கையாள் காளிங்கன் மூலமாகப் புதைத்து விடுகிறான். ஆனால், அவனது தங்கைக்கு குழந்தை இறந்தே பிறக்கிறது. அக்குழந்தையை எடுத்துவிட்டு பதிலுக்கு யாருக்கும் தெரியாமல் காளிங்கனின் குழந்தையை தனது தங்கையின் குழந்தையாக வைத்து இளவரசனாக்குகிறான்.

ராணி ஆண் குழந்தை (காண்டீபன்- எம்.ஜி.ஆர்.) ஒன்றைப் பெற்று இடையர் கார்மேகத்திடம் ஒப்படைத்துவிட்டு, ஆண்கள் நுழைய முடியாத காளி கோயிலில் தஞ்சமடைகிறார். காண்டீபன் வளர்ந்து அவனது நண்பன் அழகுவுடன் (புளிமூட்டை இராமசாமி) சேர்ந்து ஆடுமாடு மேய்க்கிறான். இளவரசனோ (ரௌத்திரன்) பெண்களைத் துரத்தி வேட்டையாடும் காமுகனாகத் திரிகிறான். இளவரசனிடமிருந்து ஒரு பெண்ணைக் காப்பாற்றும் முயற்சியில் காண்டீபன் இளவரசனைக் கடுமையாகத் தாக்கிவிட்டு மருதநாட்டுக்குத் தப்பிவிடுகிறான். அங்கு அந்நாட்டு இளவரசி (வி.என்.ஜானகி) ராணியைச் சந்திக்கிறான். இருவரும் காதலிக்கின்றனர். காண்டீபனுக்கு அரச வர்க்கத்தினர், பணக்காரர்கள் மீதான வெறுப்பை உணர்ந்து தானொரு அரண்மனை வேலைக்காரி என்று சொல்லியே ராணி பழகுகிறாள்.

குறிஞ்சி நாட்டு இளவரசனுக்கும் மருதநாட்டு இளவரசிக்கும் திருமணம் முடிக்க துர்ஜெயன் திட்டமிடுகிறான். ஆனால், இளவரசி ரௌத்திரனை இழிவாகப் பேசி மறுக்கவே துர்ஜெயனும் ரௌத்திரனும் ரகசியமாகப் படையெடுத்து வந்து அரசனைச் சிறையில் அடைத்துவிட்டு, இளவரசியைக் கடத்திச் செல்கின்றனர். காண்டீபன் இளவரசியை மீட்க முயற்சிக்கும்போது நடைபெறும் சண்டைக்கு இடையே, இளவரசி ரௌத்திரனிடமிருந்து தப்பி காளிகோயிலுக்குள் போய் விடுகிறாள். காளி கோயிலுக்குள் நுழையும் ரௌத்திரனுக்கும் காண்டீபனுக்கும் சண்டை நடக்கிறது. துர்ஜெயன் காண்டீபனைக் கொல்ல வீசும் குறுவாள் குறிதவறி ரௌத்திரனைக் கொலை செய்கிறது. கொலைக் குற்றத்தினை காண்டீபன் மீது சுமத்தி மன்னன் முன் நிறுத்தி விசாரித்து, மரண தண்டனை




துர்ஜெயன் : நீ நினைப்பது தவறு. அவன் சாதாரண மனிதனல்ல.

ராணி: எனக்குத் திருமணம் இப்போது தேவையில்லை.

துர்ஜெயன்: அப்படிச் சொல். அதற்காக அவனி போற்றும் அரசகுமாரனை அவதூறாகப் பேசாதே.

ராணி: வாழ வேண்டிய பெண் நான். அதனால் கூழாங்கல்லை வைரம் என்று கூறி, என்னை ஏமாற்ற நினைத்தால் எதிர்த்து வாதாட எனக்கு உரிமை உண்டு.

துர்ஜெயன்: ம்.. உரிமை, இந்த ராஜ்யத்தில்தான் கேள்விப்படுகிறேன்! பெற்றோர் இஷ்டப்படி நடக்க வேண்டிய ஊமைகளுக்கு உரிமை!





படங்கள் உதவி : ஞானம்

அளிக்கப்படுகிறது. காளி கோயிலுக்குள் அறுந்து வீழ்ந்த காண்டீபனின் கழுத்தில் அணிந்திருந்த டாலரைக் கொண்டு தனது மகனை அடையாளம் கண்டு கொள்ளும் அரசி சித்ரா மன்னனைச் சந்தித்து உண்மையை எடுத்துச் சொல்கிறாள்.

அதேசமயம் துர்ஜெயனால் பாதிக்கப்படும் அவனது கையாள் காளிங்கனும் மனம் திருந்தி உண்மைகளை மன்னனுக்கு எடுத்துச் சொல்லவே காண்டீபனின் மரண தண்டனை தடுத்து நிறுத்தப்படுகிறது. தப்பித்து ஓடும் துர்ஜெயனை அவனால் மானபங்கப்படுத்தப்பட்ட காளிங்கனின் மகள் முத்தம்மா குத்திக் கொலை செய்கிறாள். காண்டீபனும் ராணியும் இணைகின்றனர். 'இன்று முதல் மன்னராட்சி முடிகிறது. மக்களாட்சி மலர்கிறது. நான் மன்னன் இல்லை. மக்கள் தலைவன்' என்று காண்டீபன் சொல்வதுடன் படம் நிறைவடைகிறது. இதுவே படத்தின் கதை.

### புரட்சிப் பெண்கள்

இத்திரைப்படத்தில் வரும் பெண்கள் அனைவருமே சிறப்பானவர்களாகப் படைக்கப்பட்டுள்ளனர். குறிஞ்சி நாட்டு அரசி முதல் இளவரசியின் தோழி ரம்பா (சி.கே.நாகரத்தினம்) வரை அனைத்துப் பெண் கதாபாத்திரங்களுமே அநீதிக்கு எதிராகப் போராடுபவர்களாகவே கலைஞரால் படைக்கப்பட்டிருக்கின்றனர்.

இளவரசியைப் பெண் கேட்டு துர்ஜெயன் வரும் காட்சியில் தனது தந்தையுடன் இளவரசி ராணி பேசும் வசனங்கள், அன்றைய பெண்கள் பேசத் துணியாதவை.

ராணி: இங்கு ஏனப்பா வந்திருக்கிறார்?

அரசன்: உனது விவாகம் சம்பந்தமாக வந்திருக்கிறார். ரௌத்திரனுக்குப் பெண் கேட்டு வந்திருக்கிறார். இளவரசன் ரௌத்திரனைத் தெரியுமல்லவா?

ராணி: பெண்கள் நடுங்குவர், தெரியும்.

> **இளவரசியைப் பெண் கேட்டு துர்ஜெயன் வரும் காட்சியில் தனது தந்தையுடன் இளவரசி ராணி பேசும் வசனங்கள், அன்றைய பெண்கள் பேசத் துணியாதவை.**

என நீளும் உரையாடல்களால் கோபத்துடன் திரும்பிய துர்ஜெயன் போர் தொடுக்கப் போவதாக மருத நாட்டு அரசனுக்கு ஓலை அனுப்புகிறான். அதனைக் கண்டு கலங்கிய மருதநாட்டு அரசன் அவனது மகள் ராணியிடம் இளவரசனை திருமணம் செய்து கொள்ளத்தான் வேண்டுமென்று போருக்கு அஞ்சி வலியுறுத்துகிறார்.

அப்போது...

ராணி: அப்பா தாங்களா இப்படிப் பேசுகிறீர்கள்? போரும் வாளும் வாழ்க்கையின் தோழன் என்று பேசும் வம்சத்தில் பிறந்த தாங்களா இப்படிப் பேசுகிறீர்கள்? வெம் கொடுமைச் சாக்காட்டில் விளையாடும் தோள்கள் எம் வெற்றித் தோள்கள் என்று வீரப்பண்பாடும் பரம்பரையில் பிறந்த தாங்களா இப்படிப் பேசுகிறீர்கள்? ஈட்டியின் பாய்ச்சல் கண்டு இமை கொட்டியவன் கோழை என்பதை இருதயத்தின் தாளமாக்கிக் கொண்ட தமிழினத்தில் பிறந்த தாங்களா இப்படிப் பேசுகிறீர்கள்? வெட்கம், இழிவு.... எம் நாட்டு சரித்திரத்திற்கே இழிவு. களம் பல கண்ட கதிரவன் சிரிப்பான். வீரர்களைத் தாங்கிய இந்த பூமி சிரிக்கும். வேண்டாம், வீர வரலாற்றில் களங்கம் வேண்டாம். மரணத்துக்குப் பயந்து மாற்றானுக்கு மகளைக் கப்பமாக அளித்தான் மணிபல்லவன் என்று மானம் சிரிக்கும். அந்த மாசு படிய வேண்டாம்'

இதுபோல பல காட்சிகளை உதாரணமாக எடுத்துக்கூற இயலும். அரசியும் இளவரசியும் மட்டுமல்ல. இளவரசியின் தோழியாக (வேலைக்காரியாக) வரும் ரம்பா ஒரு காட்சியில் நாயகன் காண்டீபனுக்கு புத்தி சொல்லி எதிரிகளிடமிருந்து நாயகியைக் காப்பாற்றும் கடமை அவனுக்கு இருப்பதை உணர்த்தும் காட்சியும் வசனமும் குறிப்பிட்டுச் சொல்லப்பட வேண்டிய ஒன்றாகும்.

அது மட்டுமா? மாடு மேய்க்கும் ஏழையான காண்டீபனுக்கு வாட் பயிற்சியளித்து போர் வீரனாக மாற்றுவதே நாயகி ராணிதான் என்கிற கதைப்பின்னலும் காட்சி அமைப்பும் கலைஞரின் பெண்கள் பற்றிய கண்ணோட்டத்தினை நமக்குப் புரிய வைக்கிறது. அடுத்து படம் முழுதும் காண்டீபன் (எம்ஜிஆர்) ஏழை பணக்கார முரண்பாடு பற்றிய வர்க்க அரசியலைப் பேசுகிறார். ராணியோ பெண் உரிமையும் சமத்துவமும் பேசுகிறார். இறுதியாக மன்னராட்சி ஒழிந்து மக்களாட்சி மலர்வதுடன் படம் நிறைவடைகிறது.

...காட்சி விரியும்

---

## கலைஞருக்காக கப்பலை நிறுத்தினோம்!



கலைஞர் மறைவின்போது நடைபெற்ற நெகிழ்ச்சியான சம்பவம் ஒன்றை, இ.தர்மராஜ் என்பவர் சமூக வலைதளங்களில் பதிவிட்டு, பலராலும் பகிரப்பட்டு வருகிறது. அந்தப் பதிவு : "2018-ஆம் ஆண்டு என்னுடைய நண்பர் உதயசூரியனும் நானும் கப்பலில் இரு முதன்மைப் பொறுப்புகளில் இருந்தோம். கப்பல் இருந்ததோ அட்லாண்டிக் பெருங்கடலில். உதயசூரியன் முரட்டு தி.மு.க.காரர். ஆகஸ்ட் 8-ஆம் தேதி அதிகாலை 5 மணிக்கு, "கலைஞர் இறந்து விட்டார்" என கட்டுப்படுத்த முடியாத குரலில் அழுதுகொண்டிருந்தார் உதயசூரியன். அவரை ஆற்றுப்படுத்தினேன். ஊரில் இருந்திருந்தால் சென்னை விரைந்திருப்போம்.

"கவலைப்படாதீங்க சார், கலைஞருக்காக இங்கே ஒரு மௌன அஞ்சலி செலுத்துவோம்" எனக் கூறினேன். உடனே 2, 3-ஆம் பொறியாளர்களாக இருந்த தமிழர்களை அழைத்தோம். அனைவரும் சீருடை அணிந்துகொண்டோம். கலைஞர் புகைப்படம் ஒன்றை பிரிண்ட் எடுத்தோம். மௌன அஞ்சலி செலுத்த தயாரான வேளையில், எனக்கு இன்னொரு யோசனை வந்தது. கப்பலை அரை மணி நேரம் நிறுத்துவோம் என்றேன். உலகிலேயே கப்பலை நிறுத்தி கலைஞருக்கு மௌன அஞ்சலி செலுத்தியவர்கள் நாமாகத்தான் இருக்கணும்" என்றேன்.

கப்பலின் வேகத்தைப் படிப்படியாகக் குறைத்து, 15 நிமிடங்களுக்குப் பிறகு என்ஜினை நிறுத்தினோம். அனைவருக்கும் அதிர்ச்சி, ஏதேனும் பிரச்சினையா, இயந்திரக் கோளாறா என பேசிக் கொண்டிருந்திருப்பார்கள். எதைப் பற்றியும் கவலைப்படாமல் கப்பலின் மேல்தளத்தில் தமிழர்கள் ஐவரும் ஒன்றாகத் தமிழுக்கும் தமிழருக்கும் தமிழ்நாட்டிற்கும் தொண்டாற்றிய முத்தமிழறிஞர் கலைஞருக்கு மௌன அஞ்சலி செலுத்தினோம். ஐவரும் மனநிறைவடைந்தோம். பிறகு கப்பலை இயக்கி, அதன் இலக்கு நேரம் பாதிக்காமல் பார்த்துக்கொண்டோம்.

முரட்டு தி.மு.க.காரர்கள் கூட செய்ய முடியாததை, எத்தனை கோடி பணமிருந்தாலும் செய்ய முடியாததை செய்த திருப்தி எங்களுக்கு" எனப் பதிவிட்டுள்ளார்.

'கடலிலே தூக்கிப்போட்டாலும் கட்டுமரமாக மிதப்பேன்' என்றவருக்கு நடுக்கடலில் அஞ்சலி செலுத்தியிருக்கிறார்கள் கலைஞரின் உடன்பிறப்புகள்.

## ஃப்ளாஷ்பேக்



### உலகை வென்ற மகிழ்ச்சி!



நாஞ்சில் அ.சங்கர்

தலைநகரத்துக்குச் செல்லும்போதெல்லாம் தமிழினத் தலைவரைக் காண கோபாலபுரம் செல்வேன். சுய விவரங்களை எழுதிக் கொடுத்து கடைக்கோடித் தொண்டனும் அஞ்சுகப் புதல்வரை எளிதாகக் காணலாம். அந்த நேரங்களில் உள்ளூர் உடன்பிறப்புகளைப் பற்றி விசாரிப்பார். அவரிடம் வாழ்த்துகளைப் பரிசாகப் பெற்றுத் திரும்பும்போதும், மறுநாள் முரசொலியில் அன்புத் தலைவரைச் சந்தித்தவர்கள் பட்டியலில் நம் பெயரும் இடம்பெறுவதை வாசிக்கும்போதும், உலகத்தையே வென்றது போன்ற மகிழ்ச்சி கிடைக்கும்.

**– நாஞ்சில் அ.சங்கர்,**
**மாவட்ட துணை அமைப்பாளர்,**
**பொறியாளர் அணி, கன்னியாகுமரி கிழக்கு.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033–24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### ஆடம்பரம், வீண்செலவு!

1959-ஆம் ஆண்டு ஏப்ரல் 20 முதல் 10 நாட்கள் உதகையில் சட்டமன்றக் கூட்டத்தை நடத்த அன்றைய அரசு முடிவெடுத்தது. ஆங்கிலேயர்கள் காலத்தில் கோடையில் அங்கு சட்டமன்றக் கூட்டத்தொடர் நடத்தப்படுவது வழக்கம். ஆனால், அந்த வழக்கத்தைத் தொடர்வது ஆடம்பரச் செலவாகவும், பொதுமக்கள் விருப்பத்திற்கு மாறானதாகவும் பார்த்தது தி.மு.கழகம். அரசின் இம்முடிவைக் கண்டித்து, ஒரு வாரத்திற்கு தமிழ்நாடெங்கும் கண்டன ஊர்வலங்கள், கூட்டங்களை நடத்தியது கழகம்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131